


**18. 08. 2026**

தலைப்புச் செய்திகள்

1. தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறையில் பல்வேறு பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 80 பேருக்கு பணிநியமன ஆணைகளை முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று வழங்கினார்.

2. கர்நாடக வனப்பகுதியில் மூன்று தமிழர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பாக உயர்மட்ட விசாரணைக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

3. சாகர்மாலா திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நிதி உதவியுடன் ராமேஸ்வரம் அக்னிதீர்த்தம் மற்றும் மண்டபத்தில் மிதக்கும் தோணி துறைகள் அமைக்கப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. ஒகேனக்கல் காவிரி ஆற்றில் பரிசல் இயக்க 3ஆவது நாளாக தடை நீடிக்கிறது.

5. Galle-வில் இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

இனி விரிவான செய்திகள்

***************

முதலமைச்சர்

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறைக்கு உதவி பொறியாளர் செயல் அலுவலர் பணியிடங்களுக்காக அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 80 பேருக்கு பணி நியமன ஆணைகளை முதலமைச்சர் திரு.ஜோசப் விஜய் சென்னையில் இன்று வழங்கினார்.

இத்துறையின் கீழ் முதல் முறையாக கட்டுமான உதவி பொறியாளர் மற்றும் உதவி ஸ்தபதி பணியிடங்களுக்கு பணிநியமனம் செய்யப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம் இருக்கன்குடி மாரியம்மன் திருக்கோவிலில் 23 கோடியே 67 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்களுக்கான அன்னதான கூடம், பூஜை பொருட்கள் விற்பனை நிலையம் உள்ளிட்ட கட்டிடங்களை முதலமைச்சர் காணொலி மூலம் இன்று திறந்துவைத்தார்.

***************

சிறப்பு கவன ஈர்ப்பு – நிர்மல் குமார்

கர்நாடக மாநிலம் சாம்ராஜ்பேட்டை பகுதியில் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த 3 தமிழர்களின் குடும்பங்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்படும் என்று சட்டத்துறை அமைச்சர் திரு.நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது பேசிய அவர் உயர்மட்ட விசாரணை நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

கர்நாடக அரசு சார்பில் மாஜிஸ்திரேட் அளவிலான விசாரணை நடைபெற்று வருவதாகவும் அந்த விசாரணைக்கு பின்னர் தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது பேசிய திமுக அஇஅதிமுக பா.ம.க காங்கிரஸ் இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பிஜேபி உறுப்பினர்கள் இந்த சம்பவம் குறித்து சி.பி.ஐ விசாரணை நடத்தி உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா ஒரு கோடி ரூபாய் வரை கர்நாடக அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்த வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

அப்போது பேசிய மாநில வனத்துறை அமைச்சர் திரு.ரஞ்சித்குமார் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்த 3 தமிழர்களின் குடும்பத்திற்கும் தலா 10 லட்ச ரூபாய் தமிழக அரசின் சார்பில் வழங்குவதற்கு முதலமைச்சர் நடவடிக்கை எடுத்து வருவதாகவும், வனத்துறை அதிகாரிகளோடு கலந்துபேசி விரைவில் வழங்கப்படும் என்றும் கூறினார்.

***************

சிறப்பு கவன ஈர்ப்பு – பரங்கிபேட்டை

தமிழ்நாட்டில் மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதில் எந்தவித சமரசத்திற்கும் இடமளிக்காமல் மாநில அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் டாக்டர் வி.கே.ராஜீவ் கூறியிருக்கிறார்.

கடலூர் மாவட்டம் பரங்கிபேட்டையில் இந்துஸ்தான் ஆயில் நிறுவனம் மேம்பாட்டு கிணறுகள் அமைப்பதனால் ஏற்படும் சுற்றுச்சூழல் தாக்கம் குறித்த கவன ஈர்ப்பு தீர்மானத்தில் பேசிய அமைச்சர் இந்த திட்டத்தினால் சுற்றுச்சூழல், கடல்சார் உயிரினங்கள் மற்றும் மீன்வளம் ஆகியவற்றிற்கு ஏற்படக்கூடிய அனைத்து பாதிப்புகளையும் ஆய்வு செய்து மீனவர்கள் வாழ்வாதாரம் பாதுகாக்கப்படும் என்று கூறினார்.

வாய்ஸ்

முன்னதாக, இந்த கிணறுகள் அமைக்கப்படுவதால் கடலோர மாவட்டத்தில் உள்ள மக்கள் குறிப்பாக விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்படுவார்கள் என்றும் மீனவர்களின் வாழ்வாதாரமும் பெரும் பாதிப்பிற்குள்ளாகும் என்று தெரிவித்த திமுக அஇஅதிமுக உள்ளிட்ட கட்சிகள் மாநில அரசு இத்திட்டத்தை முற்றிலும் நிராகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினர்.

***************

ஆதவ் அர்ஜூனா - மானியக்கோரிக்கை பதில்

நெடுஞ்சாலை பொதுப்பணித்துறைகளில் கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் ஒப்பந்த விவரங்கள் குறித்த வெள்ளை அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜூனா தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் தமது துறைக்கான மானியகோரிக்கை மீதான விவாதத்தின் போது பேசிய அவர், பொதுப்பணித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில்

ஒப்பந்தங்கள் வெளிப்படையாக நடைபெற்று வருவதாக கூறினார்.

கடந்த ஆண்டை விட 20 சதவிகிதத்திலிருந்து 36 சதவிகிதம் வரை ஒப்பந்தத்தில் மதிப்பீடுகள் குறைந்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

***************

கொள்கை விளக்க குறிப்பு – ஆதவ் அர்ஜூனா

முன்னதாக பேரவையில் இன்று இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு, நெடுஞ்சாலைகள், சிறு துறைமுகங்கள் பொதுப்பணி ஆகிய துறைகளுக்கான மானிய கோரிக்கையை அமைச்சர் திரு.ஆதவ் அர்ஜூனா தாக்கல் செய்தார்.

இதில் ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்திற்கு 9 ஆயிரத்து 315 கோடியே 58 லட்சம் ரூபாயும்,

சென்னை எல்லை சாலை திட்டத்திற்கு மூவாயிரத்து 540 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

நகர பகுதிகளில் போக்குவரத்து மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்த சுமார் தொள்ளாயிரத்து 12 கோடி ரூபாயும்,

தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனத்திற்கு 593 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

சாகர்மாலா திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நிதி உதவியுடன் ராமேஸ்வரம் அக்னிதீர்த்தம் மற்றும் மண்டபத்தில் மிதக்கும் தோணி துறைகள் அமைக்கப்பட்டு வருவதாக கூறினார்.

மேலும் அக்னி தீர்த்தம் பாம்பன், மண்டபம் மற்றும் ராமேஸ்வரம் தீவை சுற்றியுள்ள பகுதிகளில் படகு சேவைகளை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பயணிகள் படகுகளை பயன்படுத்துவதற்கு இணையவழி பயணச்சீட்டு, QR குறியீடு சரிபார்ப்பு மூலம் இத்துறையின் வருவாய் மேம்படுத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

பள்ளிக்கல்வித்துறையில் ஆயிரத்து 279 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொள்ளாயிரத்து 75 பணிகள் முடிக்கப்பட்டிருப்பதாகவும்

ஆயிரத்து 950 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 836 பணிகள் நடைபெற்று வருவதாகவும் தற்போது 67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 52 பணிகள் தொடங்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

உயர்கல்வித்துறையில் ஆயிரத்து 32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 144 பணிகள் பொதுப்பணித்துறை சார்பாக நடைபெற்று வருவதாகவும், 121 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12 பணிகள் தொடங்கப்பட்டிருப்பதாகவும் கொள்கை விளக்க குறிப்பில் தெரிவித்துள்ளார்.

***************

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி 5ஆவது செமிக்கான் இந்தியா மாநாட்டை அடுத்த மாதம் 17ஆம் தேதி புதுதில்லியில் தொடங்கிவைக்கிறார்.

இதன் ஒருபகுதியாக அமெரிக்கா, ஜப்பான் தென்கொரியா சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளின் தலைமை செயல் அதிகாரிகளுடனான வட்டமேஜை மாநாட்டிலும் பிரதமர் பங்கேற்கிறார்.

3 நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் செமி கண்டெக்டர் துறையில் மகளிருக்கு அதிகாரம் அளித்தல், தலைமைத்துவம், வளர்ச்சி மேம்பாடு, கலந்துரையாடல் குறித்த அமர்வுகள் இடம்பெறுகின்றன.

40 நாடுகளை சேர்ந்த 500 கண்காட்சியாளர்கள் மற்றும் 240 நிறுவனங்கள் இதில் பங்கேற்கின்றன.

***************

பூபேந்தர் யாதவ்

பிரிக்ஸ் சுற்றுச்சூழல் அமைச்சர்கள் கூட்டம் மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் தலைமையில் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

உலகளாவிய சுற்றுச்சூழல் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் வகையில் நடைபெறும் இக்கூட்டத்தில் உறுப்பு நாடுகளின் அமைச்சர்கள் கொள்கை வகுப்பாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

பிரிக்ஸ் இளையோர் உச்சிமாநாடு நாளையும், நாளை மறுநாளும் குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெறுகிறது.

வரும் 22ஆம் தேதி விசாகப்பட்டினத்தில் பிரிக்ஸ் இளைஞர்நலத்துறை உச்சிமாநாடும் நடைபெறுகிறது.

***************

கிருஷ்ணகிரி

மாற்றுத்திறனாளிகளுக்கு நல திட்ட உதவிகள் வழங்கியதில் சிறப்பாக செயல்பட்டதற்கான மாநில அரசின் விருது கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதற்கு ஆட்சித்தலைவர் திரு.தினேஷ்குமார் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்.

அரசின் திட்டங்கள் அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் சென்றடைய மாவட்ட நிர்வாகம் முனைப்புடன் செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

வாய்ஸ்

***************

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் உங்களை தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் நாளை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி சினேகா கூறியுள்ளார்.

இதில் பொதுமக்கள் தங்களது கோரிக்கைகள் தொடர்பாக மனு அளித்து பயன்பெறலாம் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

மேட்டூர்

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 12 ஆயிரம் கன அடியாக உள்ளது.

3ஆவது நாளாக பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு 12 ஆயிரத்து 350 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 82.7 அடியாக உயர்ந்துள்ளது.

அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக 2 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.

***************

நாகை

நாகை மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் அடுத்த மாதம் 4 ஆம் தேதி தொடங்க உள்ளது.

இதில் Speed Skatting, மல்லர் கம்பம் உள்ளிட்ட 45 வகையான விளையாட்டு போட்டிகள் இடம்பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***************

இருவரி

ராணிப்பேட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு கலை பண்பாட்டுத்துறை சார்பில் 5 முதல் 16 வயது வரையிலான மாணாக்கருக்கு கலை போட்டிகள் வரும் 22ஆம் தேதி ஆற்காடு அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி ப்ரியா ரவிசந்திரன் தெரிவித்துள்ளார்.

வேலூர் மாவட்டத்தில் போதை பொருட்கள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை ஆட்சித்தலைவர் திருமதி லீலா அலெக்ஸ் இன்று துவக்கிவைத்தார்.

நூற்றுக்கும் மேற்பட்ட பள்ளி மாணாக்கர் இதில் பங்கேற்று விழிப்புணர்வு உறுதிமொழியையும் ஏற்றுக்கொண்டனர்.

***************

கிரிக்கெட்

Galle-வில் இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

4-ம் நாளான இன்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்சில் சற்றுமுன் 6 விக்கெட் இழப்பிற்கு 175 ரன் எடுத்திருந்தது.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர்

இந்தியா 462.

இலங்கை 284

***************

பேட்மிண்டன்

புதுதில்லியில் நடைபெறும் உலக பேட்மிண்டன் சாம்பியன் பட்ட ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் லக்சயா சென் – ஆஸ்திரியாவின் காலின்ஸ் வேலன்டைன்-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

***************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது